O.S.39/2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39/2018

வாதி தரப்பு 2வது சாட்சி **செல்லையா** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்லையா | வயது | : | 73/23 |
| தகப்பனார் பெயர் | : | மெய்யப்பன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | திருமலையராயசமுத்திரம் | தொழில் | : | பணி ஓய்வு தற்சமயம் விவசாயம் |

நாள்-20.12.2023

வா.சா.2-

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. **எனக்கு** நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான்.

2. வாதி தான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார்.

3. முனியாண்டி, அரங்குளவன் ஆகியோர் எனக்கு உறவினர்கள்.

4. வழக்கு சம்மந்தமான விபரங்கள் எனக்கு தெரியும்.

5. வாதி சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

6. வழக்கு சொத்து தோப்புபட்டியில் இல்லை என்றால் சரிதான். தோப்புபட்டியில் அந்த சொத்து இல்லை என்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

7. வழக்கு சொத்து முனியாண்டி, அரங்குளவன் ஆகியோர்களின் அப்பா ரெங்கனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

8. அரங்குளவன் மனைவி பெயர் கோவிந்தம்மாள், அவரது மகள் பெயர் மீனாட்சி.

9. அரங்குளவனும், முனியாண்டியும் அண்ணன், தம்பிகள் என்றால் சரிதான்.

10. ரெங்கன் உயிருடன் இருக்கும்போதே வழக்கு சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

11. வழக்கு சொத்திற்கான சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவை எனக்கு தெரியாது.

12. வழக்கு சொத்தின் பூஸ்துதி அமைப்பு தெரியுமா என்றால் தெரியும். அதில் கடைகள் மற்றும் காலியிடமும் உள்ளது.

மு.மா.நீ,

13. 2ம் பிரதிவாதியின் கணவர் அரங்குளவன் திருமணமான கொஞ்ச நாட்களில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்ததால் தான் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு இருந்ததால் அவர் மனைவியுடன் கருத்து வேறுபாடு இருந்தது என்றால் சரிதான்.

14. அவ்வாறு குடும்பத்தில் கருத்துவேறுபாடு இருந்ததால்தான் சொத்தினை அவரது அம்மா பெயருக்கு எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான்.

15. வாதிகள் சரசு, வள்ளிக்கண்ணு ஆகிய இருவரையும் வெளியூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வெளியூரில் இருப்பதால் அவர்கள் வழக்கு சொத்திற்கு வருவதில்லை என்றால் சரிதான்.

16. வழக்கு சொத்தினை இல்லாத முனியாண்டிக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்து வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான்.

17. 2ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் அவரது கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்தார் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

18. 2ம் பிரதிவாதிக்கும் அவரது கணவர் அரங்குளவனுக்கும் விவாகரத்து ஆனதா என்றால் விவாகரத்து ஆகவில்லை.

19. வழக்கு சொத்தில்தான் கோவிந்தம்மாள் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

20. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.